ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 155/10 — 1975 මාර්තු 19 වැනි බදාදා — 1975.03.19
155/10 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு மாச்சு மாதம் 19 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிளியு. 68 (49)/75.

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ், முதலமைச்சரின் விதப்புரையின்மீது, சனாதிபதியால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.

**வி. கொபல்லவ,**
**சனாதிபதி.**

கொழும்பு,
1975 மாச்சு 19.

ஒழுங்குவிதி

1. (1) பகிரங்கக் கூட்டுத்தாபனம் ஒன்றின் பணிப்பாளர் சபை அல்லது அத்தகைய கூட்டுத்தாபனத்தின் முகாமை ஒப்படைக்கப்பட்ட ஆளொருவர் அதனது அல்லது அவரது முழுத் தற்றுணிபின்படி அத்தகைய கூட்டுத் தாபனத்தின் ஊழியர் எவரையும், அவர்—

(அ) சட்டமுறையாகத் தாபிக்கப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் அக்கறைகளுக்குப் பாதகமான அல்லது அதனது பாதுகாப்புக்கு ஆபத்தான ஏதேனும் செயலில் ஈடுபட்டுள்ளாரென ; அல்லது

(ஆ) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியினால் தடைசெய்யப்பட்டுள்ள ஏதேனும் தாபனத்தின் நடவடிக்கை களுடன் சம்பந்தப்பட்டுள்ளாரென அல்லது அதில் சேர்ந்துள்ளாரென ; அல்லது

(இ) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியினை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது விதியை மீறியுள்ளாரென அல்லது அதற்கு இணங்கியொழுகாது விட்டுள்ளாரென—

சந்தேகிக்கப்படின், அவரைச் சேவையிலிருந்து இடைநிறுத்தி வைக்கலாம்.

(2) பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் ஊழியரொருவரின் சேவைகள் (1) ஆம் பந்தியின் கீழ் இடைநிறுத்தி வைக்கப்படுமிடத்து, அவரது சேவைகள் இடைநிறுத்திவைக்கப்பட்ட காலத்தின்போது ஏதேனும் சம்பளம் அல்லது படிப் பணங்கள் கொடுக்கப்படுவதற்கு அவர் உரித்துடையராதலாகாது ;

ஆயினும், எப்படியிருப்பினும், அத்தகைய கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை அல்லது அத்தகைய கூட்டுத்தாபனத்தின் முகாமை பொறுப்பிக்கப்பட்டுள்ள ஆள், அதனது அல்லது அவரது தனித் தற்றுணிபின்படி, எவையேனும் படிப்பணங்களுடனோ அவையின்றியோ அத்தகைய ஊழியர் சாதாரணமாக உரித்துடையவராயுள்ள சம்பளத்தின் ஓர் அரைவாசியை அவருக்குக் கொடுக்கலாம்.

(3) இவ்வொழுங்குவிதியின் கீழ்ப் பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் ஊழியரொருவரின் சேவைகளை இடை நிறுத்தி வைத்தலானது அல்லது அத்தகைய ஊழியரின் சம்பளத்தை அல்லது படிகளைக் கொடாதிருத்தலானது ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது.

(4) வேறேதேனும் எழுத்திலான சட்டத்திலுள்ளதெதனையும் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் ஊழியர்களுக்கும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்குமிடையேயான சேவை ஒப்பந்தமெதனதும் நியதிகளையும் நிபந்தனை களையும் பொருட்படுத்தாது, இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகள் பயனுள்ளனவாயிருத்தல் வேண்டும்.

(5) இவ்வொழுங்குவிதியின் "பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது அதன் மூலதனம் பாகமாகவோ முழுமை யாகவோ அரசாங்கத்தினால் வழங்கப்பட்டவொரு கூட்டுத்தாபனமெனப் பொருளாகும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.